**தாவரவியல் ”ங்கா பொறுப்பு நிதியம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தாவரவியல் ”ங்கா பொறுப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று / ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று / வருமானக் கூற்று / நிதிச் செயலாற்றல் கூற்று / இலாபநட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று / தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) அதிகாரத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இல. 19 கணக்காய்வு சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றுக்கு அறிக்கையிட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பொறுப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏ!எஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொள்ளல் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்துக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்க" ர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்காய்வு நியமம் 16 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு கொள்கை மாற்றம் செய்யப்பட்டமை தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருந்த | சரியான முறையில் பெறுமான தேய்வு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய பாவனைக்கு வரும் சரியான சந்தர்ப்பங்களிலிருந்து பெறுமானத் தேய்வு செய்ய வேண்டும். |

போதிலும் ஏதாவது சொத்துக்கள் பயன்படுத்த தொடங்கிய தினத்திலிருந்து சமமாக பெறுமானத்தேய்வு செய்ய வேண்டும். ஆனாலும், பொறுப்பு நிதியத்தின் வருட ஆரம்பத்தில் மூலதனமாக்கப்பட்ட சொத்துக்களும் ” ரணமாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டு காலப்பகுதியில் ரூபா.7,546,446 பெறுமதியான பெறுமானத்தேய்வு கூடுதலாக நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் வருமானமாக ரூபா. 565,940 பெறுமதியான வழிகாட்டி நூல்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்களின் விற்பனை வருமானமாக ரூபா. 565,940 கணக்கிடப்பட்டிருந்தன. ஆனாலும், வழிகாட்டி நூல்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களின் விற்பனை தொடர்பாக இலாப நட்டக்கணக்கு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரமான நட்டங்கள் வருமானத்திற்கு சீர் செய்தமையால் வழிகாட்டி நூல்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களின் விற்பனை இரட்டிப்பாக இருந்தது. | வழிகாட்டி நூல்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களின் விற்பனை வருமானம் இரட்டிப்பாக கணக்கிடப்படாமல் இருப்பதற்கான தவறினை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வருமானம் இரட்டிப்பாக கணக்கிடப்பட்டமை தொடர்பில் திருத்தங்கள் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா. 1,615,373 பெறுமதியான ஹக்கல தாவரவியல் ’’ங்காவில் மேற்கொள்ளப்பட்ட சங்கிலி வேலி (Chain link fence) மற்றும் ரூபா. 4,142,584 பெறுமதியான அவிசாவல தாவரவியல் ’’ங்காவில் பொருத்தப்பட்ட மின்னல் | குறித்த இரட்டிப்புக் கணக்கு வைப்பு முறையை சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொறி, இயந்திரம், உபகரணங்களின் பெறுமதி கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கின்றமையால் அதனை தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடத்தி (Lightning conductor) என்பன குறைவேலைகளாகவும் நிலையான சொத்துக்களாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | | |
| (இ) | மீளாய்வாண்டு காலப்பகுதியில் ஹக்கல தாவரவியல் ”ங்காவில் ஆரம்ப குறைவேலைகளை முடிவுறுத்துவதற்காக ரூபா. 245,247 செலுத்தப்பட்டிருந்தன. குறித்த வேலை வெள்ளத்தால் அழிவடைந்திருந்த போதும் அதனை செலவாக இனங்கண்டு பதிவழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாது மூலதனமாக்கப்பட்டிருந்தது. | ரூபா. 245,247 பெறுமதியான கொடுப்பனவை செலவாக கணக்கு வைக்காமைக்கான தவறை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலவினமாக இனங்கண்டு கணக்கில் எடுக்க வேண்டும். |
| (ஈ) | காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினமான ரூபா. 5,174,337 கட்டட அபிவிருத்தி நடவடிக்கையாக மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டில் ரூபா. 170,753 பெறுமதியான பெறுமானத் தேய்வு குறைவாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | தவறினை தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் தனித்தனியாக சரியானமுறையில் இனங்கண்டு கணக்கு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | வேலைகள் நிறைவடைந்து மூலதனமாக்கப்பட வேண்டிய 04 செயற்திட்டங்களுக்கு முற்பணமாக கொடுக்கப்பட்ட ரூபா. 3,562,988 பெறுமதி குறைவேலைகள் கணக்கிற்கு சீர் செய்யாமல் நிதிக்கூற்றுக்களில் முற்பணமாக காட்டப்பட்டுள்ளது. | தீர்வு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்கீட்டுக் குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| கட்டட அபிவிருத்தி செயற்பாடுகள் | 210,786,985 | 210,351,124 | 435,861 | குறித்த கணக்கீட்டு குறிப்பினை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் | தவறினை சீர்செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை

| கிடைக்கப்பெறாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் சொத்துக்கள் வரலாற்று கிரய அடிப்படையில் பெறுமானத் தேய்வு சீர்செய்யப்பட்ட போதிலும் அவற்றின் கொள்வனவு திகதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வில் பெறுமதிகளின் உண்மைத்தன்மையை உறதிப்படுத்த முடியவில்லை. | 2006 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு பொறுப்பான நிதியத்தின் சொத்தினதும் சரியான கொள்வனவுத் திகதி, பாவனைத் திகதி மற்றும் பெறுமானத் தேய்வு சீராக்கங்களை தனித்தனியாக அடையாளங் காணுவதற்கு நடைமுறையில் கடினமாக இருக்கின்றது. பெறுமானத் தேய்வானது சொத்துக்களின் கொள்வனவிற்கான முழு ஆண்டுக்கும் சீராக்கம் செய்யப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். | பெறுமானத் தேய்வு கொள்கைகள் மாறும் போது சொத்துக்களின் கொள்வனவுத் திகதியிலிருந்து பெறுமானத் தேய்வு செய்வதற்கான கணக்கீட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | தாவரவியல் ” ங்கா பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கையளிக்கின்ற உறுதிகள் | | | |
| | (i) பந்தி 3 (எ) (I) | நம்பிக்கை சபை ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் | தேசிய தாவரவியல் ” ங்காக்கள் திணைக்களம் 4 | நம்பிக்கையளிக்கின்ற கருவிகளின் பிரகாரம் காலாண்டுக்கொரு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறைந்தது ஒரு முறையாவது கூட்டத்தை நடாத்துதல் வேண்டும். மீளாய்வாண்டின் 1ம் மற்றும் 3ம் காலாண்டுகளில் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. 2ம் காலாண்டில் இருமுறை கூட்டம் நடாத்தப்பட்டது. | அமைச்சுக்களின் கீழ் மாறிமாறி இருந்தமையாலும் காலத்திற்கு காலம் செயலாளர்கள் மாற்றப்பட்டமையாலும் 7 மாத காலமாக பணிப்பாளர் நாயகம் பதில் கடமை ஆற்றியமையாலும் உரிய காலத்தில் கூட்டங்களை நடாத்த முடியவில்லை என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். | முறை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| (ii) | பந்தி 5 (2) (c) | தாவரவியல் "ங்காக்களில் வேலை செய்கின்ற விஞ்ஞானிகளுக்கு அவர்களின் தொழில்நுட்ப அறிவினை வளர்க்கவும் வசதிகளை வழங்கவும், தேவையான ஏதாவது சாதனங்களை கொள்வனவு செய்வதற்கும் நிதி உதவிகளை வழங்கலாம். இருந்த போதிலும் நிதியத்திலிருந்து நோக்கத்திற்கு மாறாக ரூபா. 1,189,585 தொகை வெளிநாட்டுப் பயிற்சிக்காக செலவழிக்கப்பட்டிருக்கின்றது. | தாவரவியல் "ங்காவை மேலதிகமாக அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் விஞ்ஞான அறிவு மட்டும் இல்லாமல் முகாமைத்துவம், பொறியியல், கணக்கீடு, கணக்காய்வு கொள்முதல் மற்றும் நிர்வாக அறிவுகளும் பங்களிப்பு செய்ய வேண்டும். அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் 6 வகையான வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்குபற்றினர். அதில் 4 வகையான பயிற்சிகள் விஞ்ஞான அறிவை மேம்படுத்துவதாக காணப்படுகின்றது. மற்றைய 2 பயிற்சிகளும் மேலதிகமாக அபிவிருத்தி செய்வதற்கு தேவையான அறிவை வளர்க்கின்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். | நம்பிக்கையளிக்கும் கருவிகளின் பிரகாரம் அறிவு, திறன், செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக நிதியத்தாலே தேவையான நிதி பங்களிப்புக்களை செய்ய முடியும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 18 ஆகஸ்ட் 2018 இல் திகதியிடப்பட்ட பொது நிதிச் சுற்றறிக்கை இல. 02/2018 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த நிதியானது மூடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இருந்த போதும் நிதியானது கலைக்கப்படாமல் 2018 செப்ரம்பர் 17 ஆம் திகதி தாவரவியல் ”ங்கா திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு முறையீடு ஒன்றை கையளித்துள்ளார். அது தற்பொழுது கலந்து ஆலோசித்தல் நிலையில் இருக்கின்றது. | கருத்துக்கள் தரப்படவில்லை. | இந்த நிதியானது சட்டரீதியாக உருவாக்கப்பட வேண்டும் அல்லது கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் நிதி விளைவாக மேலதிக நிதி ரூபா. 119,721,992 ஆக காணப்பட்டிருக்கின்ற போதிலும் அதற்கு நேர்முன்னைய ஆண்டில் மேலதிக நிதியாக ரூபா. 134,504,011 காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி மீளாய்வில் ரூபா. 14,782,019 குறைவு ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. குறித்த குறைவுக்கு காரணம் முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு கொள்கை மாற்றப்பட்டமையால் பெறுமானத்தேய்வுத் தொகை ரூபா. 40,876,786 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நிதி மற்றும் ஏனைய செலவுகள் ரூபா. 3,408,590 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக காணப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியின் இலக்குகளின் கீழ் வருகின்ற 7 வகையான குறிக்கோள்களில் ஒரு குறிக்கோள் தேசிய தாவரவியல் ”ங்கா திணைக்களத்தில் உள்ள விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மீண்டுவரும் நிதியில் குறைபாடு ஏற்பட்டால் அது பொறுப்பு நிதியில் இருந்து | தேசிய தாவரவியல் ”ங்காக்கள் திணைக்களத்திற்கு சொந்தமான தாவரவியல் ”ங்காக்கள் 365 நாட்களும் முழுமையாக பார்வையாளர்களுக்கு திறந்துவைப்பதற்கு தேவையான அலுவலக நடவடிக்கைகள் சம்மந்தமானதும் தாவரவியல் திணைக்களத்துடன் சம்மந்தப்பட்ட விசேட கடமைகள் அடையாளம் காணப்பட்டு அந்தக் கடமைகள் தொடர்ச்சியாக செய்வதற்கு தேவைப்பாடு உள்ளதென நம்பிக்கை சபைக்கு அறிவித்த பின்னர் அதற்காக அனுமதி | நிதியில் இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்துகொள்வதற்கு விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேவையான மீண்டுவரும் நிதிக் குறைபாடுகள் மட்டும் சீர்செய்யப்பட வேண்டும். மற்றும் ஏனைய மீண்டுவரும் செலவுகளிற்கான கொடுப்பனவாக மேற்கொள்ள முடியாது. |

சீராக்கம் செய்ய முடியும். ஆனாலும் திணைக்களத்தில் பொது நிர்வாக செலவுகள் விசேட மீண்டுவரும் செலவுகளாக காட்டி மீளாய்வாண்டில் ரூபா. 23,690,558 பெறுமதியான தொகை பொறுப்பு நிதியில் இருந்து சீராக்கப்பட்டன.

எடுக்கப்பட்ட பின் தொடர்புடைய மீண்டுவரும் செலவுகள் செலவு செய்யப்பட்டன என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.